| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | | | | |
|---|---|---|---|---|
| **கணக்கின் தன்மை** | **வாடிக்கையாளருக்கான நன்மைகள்** | **ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்** | **தகுதி** | **முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்** |
| நடைமுறைக் கணக்கு | **இணைய மற்றும் கைபேசி வங்கிச் சேவை**<br><br>**சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப் பட்ட பற்றட்டைகள்**<br><br>**காசோலைகளை விரைவாகப் பணமாக்கும் வசதி**<br><br>**வாடிக்கையாளருக்கு ஏற்ப வடிவமைக்கப் பட்ட காசோலைப் புத்தகம்**<br><br>**ஒரே நாளில் காசோலைப் புத்தகத்தை வழங்கும் முறைமை**<br><br>**குறுஞ்செய்தி விழிப்பூட்டல் வசதி** | **ஆரம்ப வைப்பு**<br>- தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் (நபர்) ரூ. 7500/-<br>- தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் (வியாபாரம்)ரூ. 7500/-<br>- வியாபார வாடிக்கையாளர்கள் ரூ. 15,000/-<br>- பெருநிறுவன வாடிக்கையாளர் ரூ. 250,000<br><br>**கணக்கை மூடுவதற்கான கட்டணம் – ரூ.**1,500/-<br><br>**கணக்கைப் பேணும் கட்டணங்களும் பிற கட்டணங்களும்**<br>- மாதாந்த சேவைக் கட்டணம்<br>- ஆகக் குறைந்த மேலதிகப் பற்று வட்டி<br>- காசோலை திரும்பல் கட்டணங்கள்<br>- கொடுப்பனவு நிறுத்தற் கட்டணங்கள்<br>- நடைமுறைக் கணக்குக் கூற்றுக் கட்டணங்கள்<br>- கூற்றுக்களின் நகல்களை வழங்குவதற்கான கட்டணங்கள்<br>- காசோலைப் புத்தகச் செலவு<br>- காசுக் கட்டளையைத் தயார்ப்படுத்தல்<br>- கணக்குமீதி உறுதிப்படுத்தல்<br>- குறுஞ்செய்தி விழிப்பூட்டல் கட்டணங்கள்<br>- அட்டை வழங்கல்<br>- மீளப்பெறல் வரம்பு மாற்றம் | **கணக்கைத் திறக்கத் தகுதியானவர்கள்**<br>- தனிநபர்கள்<br>- கூட்டு<br>- ஏக உரிமையாளர்கள்<br>- புத்த பிக்குகளுக்கான கணக்கு<br>- பங்காண்மை<br>- வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி<br>- சமூக கழகங்கள், சங்கங்கள், தொழிற் சங்கங்கள்<br>- கூட்டுறவுச் சங்கங்கள்<br>- அரச கணக்குகள்<br>- அரச பாடசாலைக் கணக்குகள்<br>- அரச சார்பற்ற பாடசாலைக் கணக்குகள்<br>- அரச அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள்<br>- பாராளுமன்றச் சட்டங்களால் அமைக்கப்பட்ட கூட்டாண்மைகள்/சபைகள்<br>- சேகரிப்புக் கணக்குகள்<br>- அரச சார்பற்ற நிறுவனங்கள்<br><br>**கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்**<br>இலங்கை வங்கியின் சேமிப்பு / நடைமுறை கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும்.<br><br>**தனிநபர் நடைமுறைக் கணக்குகள்**<br>- தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு<br><br>- தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்<br><br>- விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து | • ஆரம்ப வைப்பு மற்றும் பேண வேண்டிய சராசரி கணக்கு மீதி தொடர்பில் அறிய மாதாந்த சேவைக் கட்டணங்களைப் பார்வையிடவும்<br><br>• காசோலைகளை வழங்குவதற்கு முன்னர் போதுமான பணத்தைப் பேணுதல் வேண்டும்<br><br>• கணக்கை திருப்திகரமாக நிர்வகிக்காமை காரணமாக கணக்குத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அல்லது கணக்கை மூடும் உரிமை வங்கிக்கு உண்டு.<br><br>• கணக்கில் மேலதிகப் பற்று வைப்பதற்கு முன்னர் வாடிக்கையாளர் முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.<br><br>• தற்போதைய வரிகள், வட்டி வீதங்கள் மற்றும் பிற கட்டணங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள கிளையை நாடவும் அல்லது வங்கியின் இணையத்தளத்தைப் பார்வையிடவும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | - இணைய வங்கிச் சேவைக் கட்டணங்கள்<br><br>https://www.boc.lk/rates-tariff#general-tariff என்ற இணைப்பிற் சென்று தொகை விபரங்களை அறிந்துகொள்ளவும் | கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள்.<br><br>**தனிநபரல்லாத நடைமுறைக் கணக்குகள்**<br>தேவைப்படும் ஆவணங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையைத் தொடர்பு கொள்ளவும் | • இக்கணக்கிற்கான அனைத்து நிபந்தனைகளையும் வசதிகளையும் மாற்றும், திருத்தும் அல்லது புதியவற்றைச் சேர்க்கும் அதிகாரம் இலங்கை வங்கிக்கு உண்டு. |

**காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்**

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

**உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்**

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

**தொலைபேசி**: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

**அஞ்சல்**: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.